**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.9** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சந்திரமோகன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **23.02.2026**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா காவல்நிலையத்தில் காவல்ஆய்வளாராக பணிபுரிகிறேன். கடந்த 29.12.2015ம் தேதி அரியலூர் காவல்நிலையத்தில் உதவிஆய்வளராக பணியில் இருந்தபோது புகார்தாரர் அப்பாதுரை த/பெ.லெட்சுமணன் நொச்சிக்குளம் அவர் நிலையம் ஆஜராகி காவல்நிலைய மனு எண்.641/2015 பார்வைக்கு அன்றைய தினம் 12.00 மணியளவில் அரியலூர் காவல்நிலைய குற்ற எண்.899/2015 சட்டப்பிரிவு 447, 294(b), 506(ii) r/w 3(1) of PPDL Act ன் படி வழக்கு பதிவுசெய்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.5, இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 13.00 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் கருப்பையா, பூராசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். பார்வைமகசர் அ.சா.ஆ.6, மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7, பின்னர் சாட்சிகள் அப்பாதுரை, செல்லப்பாப்பு, செல்லதுரை,

சக்திவேல், பாலசுப்ரமணியம், வரதராஜன், மாரிமுத்து, நாகராஜன், கருப்பையா, பூராசாமி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் என்னுடைய ரகசிய விசாரணையில் இருந்தும் சம்பவம் நடைபெற்றுது உண்மை என்று தெரியவருவதால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் ஆறுமுகம், தருமராஜ், பெரியசாமி, மாயக்கிருஷ்ணன், அறிவழகன், ராஜாங்கம் ஆகியோர்களை நொச்சிக்குளம் வாட்டர் டேங் அருகில் வைத்து 29.12.2015ம் தேதி 15.30 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், எதிரிகளை கைது செய்த விவரத்தை அவருடைய உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் எதிரி ஆறுமுகம் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சிகள் மாரிமுத்து, நாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவுசெய்தேன். வழக்கின் சட்டப்பிரிவை 447, 294(b), 506(ii) r/w 3(1) of PPDL Actலிருந்து 147, 148, 447, 294(b), 506(ii) r/w 3(1) of PPDL Act ஆக பிரிவு மாற்றம் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.8, பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட நிலம் யாருக்கு சொந்தமானது என்ற அறிய நொச்சிக்குளம் கிராமநிர்வாகஅதிகாரி முருகானந்தம் அவர்களிடம் சான்று பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது வழக்கு விசாரணையை முடித்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னுடைய விசாரணையின் போது அ.சா.1, 6, 7 ஆகியோர்கள் எதிரிகளையும் குற்றசம்பவத்தையும் இணைத்து வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

23.12.2015ம் தேதி இரவு நடைபெற்றதாக கூறப்படும் சம்பவத்திற்கு 29.12.2015ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 24.12.2015ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு CSR ரசீது கொடுக்கப்பட்டுள்ளது. அந்த CSR ரசீது நகலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்றால் சரிதான். அப்பாதுரை கொடுத்தபுகார் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அந்த புகாரில் அடுத்த நாள் 24.12.2015ம் தேதி காலையில் காலை 07.00 மணிக்கு வயலுக்கு சென்றபோது சேதப்படுத்தப்பட்டு இருந்த விவரம் தெரிந்தது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் 1வது எதிரியை எத்தனை மணிக்கு, எங்கு வைத்து சந்தித்து கேட்டேன் என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் எத்தனை கல்தூண்கள் நிலத்தில் சேதப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் 1வது எதிரி பெயரை தவிர வேறு எதிரிகள் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் JCB ஐ வைத்து சேதப்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு எதிரிகளை ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் வைத்து கைது செய்தேன். புகாரில் ரூ.50000/- சேதம் என்று குறிப்பட்டிருப்பது கம்பியிலா, கல்லிலா என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கல், கம்பி சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். புகாரில் கிராம முக்கியக்ஸதர்களிடம் சொன்னோம், கேட்கவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த கிராம முக்கிஸ்தர்களை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். எதனால் சட்டப்பிரிவை மாற்றம் செய்தேன் என்று அந்த அறிக்கையில் சொல்லவில்லை என்றால் எதிரிகள் ஆறு பேர்கள் வந்ததாக தெரியவந்ததால் மாற்றம் செய்ததாக கூறியுள்ளேன். அந்த ஆறுபேர்கள் வந்த விவரம் எப்படி தெரிந்தது என்ற விவரத்தை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 29.12.2015ம் தேதி மதியம் 01.00 மணிக்கு சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்தேன். நான் தயார் செய்த வரைபடத்தில் கம்பிவேலி பிடுங்கி வேறு இடத்தில் நடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரருக்கும் 1வது எதிரிக்கும் இடையே பிரச்சனைக்குரிய இடம் சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரிந்தது. சிவில் வழக்கிலிருந்து தப்பிபதற்காக புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும், நான் சரியான முறையில்

புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. 29.12.2015ம் பதிவுசெய்யப்பட்ட முதல்தகவல்அறிக்கை 30.12.2015ம் தேதி நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்ன நாளில், இடத்தில் எதிரிகளை கைதுசெய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோன்று நான் சம்பவஇடம் செல்லவில்லை என்றும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.